இல்லங்கள் இவைகள் எல்லாம் அறநிலையத் துறையின் சார்பிலே நடைபெறுகின்றன என்ற செய்தியைத் தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் முன்பே ஒரு முறை இங்கே பேசுகிறபோது இப்படி ஆலயங்களின் நிதியிலிருந்து நடத்தப்படுகின்றவர்கள் குறித்து ஒரு யோசனை தெரிவித்திருக்கிறார்கள். அந்த நிறுவனங்கள் அந்த ஆலயங்களின் பெயராலேயே நடத்தப்பட வேண்டும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். அது அறநிலையத்துறையின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. ஆகவே இனிமேல் மொத்தமாக அறநிலையத் துறையாலே நடத்தப்படுகின்ற அது போன்ற நிறுவனங்கள் அனைத்திற்கும் ஒரு பெயரைத் தேர்ந்தெடுத்து அறிவித்தால், அதன் மூலம் மக்கள் மேலும் நல்ல நன்கொடைகளை அளிக்க ஊக்கம் அளிப்பதாக இருக்கும். அந்தக் காரணத்தினாலே, இதைப்பற்றி அரசு தீவிரமாகப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள்.

* 165. வினா—திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஊராட்சி ஒன்றியங்களில் தொடர்ச்சியாக ஓராண்டுக்கு மேல் பணிபுரிந்த ஆசிரியர்களில் மாணவர்கள் வருகைக் குறைவின் காரணமாக 1979—80 கல்வி ஆண்டில் பணிநீக்கம் செய்யப்பட்டோர், ஒன்றிய வாரியாக எத்தனை பேர் ?

(இ) அவர்கட்கு மீண்டும் வேலை வாய்ப்பளிக்கப்பட்டு விட்டதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : ஊராட்சி ஒன்றியங்களிலே, நகராட்சி ஒன்றியங்களிலே விடுப்பு இடங்களிலே ஆசிரியர்கள் பணி அளிக்கப்பட்டு, அவர்கள் அங்கு 5, 6 மாதங்கள் பணியாற்றிய பிறகு. வேலை நீக்கம் செய்யப்படுகின்ற நிலைமைகள் எற்படுகின்றன. அவர்கள் அங்கு காலியிடங்கள் ஏற்படுகின்ற வரையிலே வேலை இல்லாமல் இருக்கிறார்கள். அப்படி காலியிடம் எற்படுகின்றபோதுதான் மீண்டும் அவர்களுக்கு வேலை அளிக்கப்படும் என்று சொல்கிறார்கள். அதிலும், ஒரு முறை ஒரு இடத்தில் வேலை பார்த்துவிட்டு வெளியேறிவிட்டால், அவர்கள் வேலை தேடித்தரும் ஸ்தாபனத்

தில் சென்று, அதன் மூலமாக வரவேண்டியிருக்கிறது. ஆகவே அவர்களுக்கு நிரந்தரமாக ஒரு முறை ஒரு இடத்தில் வேலை செய்திருந்தால், அந்த இடத்திலேயே அடுத்தமுறை வேலையளிக்கின்ற வகையிலே ஆய்வு செய்து, அரசு தக்க ஆணை பிறப்பிக்க முயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மூலக் கேள்வி ஊராட்சி ஒன்றியங்களில் தொடர்ச்சியாக ஓராண்டுக்கு மேல் பணிபுரிந்த ஆசிரியர்களில், மாணவர்கள் வருகைக் குறைவின் காரணமாக 1979—80 கல்வி ஆண்டில் பணி நீக்கம் செய்யப்பட்டோர், ஒன்றிய வாரியாக எத்தனை பேர் என்பதுதான். அந்த மூலக் கேள்விக்கும், மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் இப்போது கேட்டிருக்கின்ற உப-கேள்விக்கும் சம்பந்தமில்லை. தனிக் கேள்வி போட வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 9-50)

திரு. க. மீனாட்சிசுந்தரம் : இந்த நிலைமைகள் பிரகாரமே வேலை நீக்கம் செய்யப்பட்டிருந்தால்கூட, அவர்களுக்குகூட அந்த நடைமுறை பயன் படுத்தப்படுகிறது. அதற்கு ஆவன செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மேற்கொண்டு விவரங்கள் வேண்டுமென்றால், தனிக் கேள்வி போட்டால் நலமாக இருக்கும்.

உள்ளாட்சித் தேர்தல்களில் வாக்காளர்களுக்கு அடையாள அட்டை.

***166 வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வருகின்ற உள்ளாட்சித் தேர்தல்களில், வாக்காளர்களுக்கு புகைப் படம் ஒட்டிய அடையாள அட்டை வழங்கும் உத்தேசம் ஏதும் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா ?

(இ) ஆம் எனில், அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவரவர்களே, . . .